[திரு. கே. பி. பழனி] [15th March 1963

அடுத்து, ஹரிஜன மக்கள் வாழ்கின்ற பெருவாரியான பகுதிகளில் லோகல் டெவெலெப்மெண்டு திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யவேண்டிய சூழ்நிலையில் ஒரு பங்கு தொகையை ஹரிஜன மக்களிடமே கேட்கிறார்கள். அவர்கள் அந்தத் தொகையைக் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லாததினால் அவர்கள் அம்மாதிரி கொடுக்க வேண்டாம் என விதிவிலக்குச் செய்யவேண்டும் என்ற யோசனையையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொது சுகாதாரம்பற்றி எண்ணுகின்ற நேரத்தில் பெருவாரியான மக்கள் வாழ்வில் வறுமையும் அறியாமையும் கலந்து இருப்பதன் காரணமாக மிகமோசமான நிலையில் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. இதனால் பல வியாதிகளுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, அவர்கள் வாழக்கூடிய பகுதியில் பொதுச் சுகாதாரம் சரியான முறையில் கவனிக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். அரசாங்க டாக்டர்கள் மாதம் இருமுறையாவது சேரியைப் பார்வையிட சட்டம் செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து, ஹரிஜன மக்களுக்கு சமுதாய அந்தஸ்து உயரவேண்டுமென்று சொன்னால் அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்குத் திட்டம் வகுக்கவேண்டும். அதற்கு பஸ் பர்மிட் வழங்குவது, இன்னும் பல தொழில்களுக்கு லைசென்சு வழங்குவது ஆகியவற்றில் அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய பொருளாதார அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஹரிஜன முன்னேற்றம் என்பது தனிப்பட்ட ஒரு அரசியல் கட்சியின் பிரச்சனை அல்ல. இது தேசிய பிரச்சனை. இந்த உண்மையை உணர்ந்து நாட்டில் உள்ள எல்லா எதிர்க்கட்சி நண்பர்களும் தங்களுடைய கட்சி வேறுபாடுகளை மறந்து, மன மாச்சர்யங்களை மறந்து ஹரிஜன பிற்பட்ட சமூகத்திற்கு உழைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

MR. SPEAKER: The Deputy Leader of the Opposition will take 25 minutes and the Hon. the Minister will take 40 minutes for his reply and so the House will have to sit till 1-55 or 2 p.m. I hope the House has no objection to sit till that time.

* **திரு. மு. கருணாநிதி:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று இந்த மன்றத்திலே வைக்கப்பட்டுள்ள ஹரிஜன மானியத்தின்மீது எங்களுடைய கட்சியைச் சேர்ந்த கனம் அழகமுத்து அவர்கள் வைத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பல ஆண்டு காலமாகச் சமுதாயத்தினுடைய அடித் தளத்திலே அழுத்தப்பட்டு முன்னேற வழியில்லாமல் முடங்கிக் கிடந்த ஒரு சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டுமென்கின்ற புரட்சிகரமான நோக்கம் இந்தியாவில், குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்தில், பல ஆண்டுகளுக்குமுன்பே தோன்றியிருக்கிறது என்பதனை, இந்த உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய பெருமை ஏதோ ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு என்று இல்லாமல், பழங்குடி மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கரை கொண்டிருக்கிற தமிழகத்தைச் சேர்ந்த சான்றோர்கள் உணர்ந்திருக்கிறார்கள். எல்லா அரசியல் கட்சிகளுமே அந்தக் கொள்கையை ஒத்துக்கொண்டு, அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அந்த வகையில் இந்த மானியத்தில், ஹரிஜனங்களுக்காக, பின் அடைந்திருக்கிற மக்களுக்காக, ஆதிவாசிகளுக்காக, ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 3 கோடியே 90 லட்சம் ரூபாய் என்பது போதுமானது அல்ல என்பதை எதிர்த் தரப்பிலிருந்து மாத்திரமல்ல, ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிற தோழர்கள் பலரும் இங்கே அழுத்தம் திருத்தமாக எடுத்துக். கூறியிருக்கிறார்கள். வெட்டுப் பிரேரணை என்பது இந்த மன்றத்திலே

15th March 1963] [திரு. மு. கருணாநிதி]

எதிர் கட்சியினரும், ஆளும் கட்சியினரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு ஒரு விவாதத்தை அமைப்பதற்காகப் பயன்படுத்துகிற முறையே அல்லாமல், இத்தனை ரூபாயை வெட்ட வேண்டும் என்று நாங்கள் குறிப்பிட்டிருக்கின்றது, மானியத் தொகையிலிருந்து, உண்மையிலேயே வெட்ட வேண்டும் என்ற பொருளில் அல்ல. அந்த வகையில் ஆளும் கட்சி அன்பர்கள் அத்தனை பேருமே இந்தத் தொகையை அடுத்த ஆண்டிலாவது மேலும் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினார்கள். நாங்கள் இந்த மானியத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் குறைப்பாடுகளை எடுத்துச் சொல்லுகிறோம் என்றால், தேவையானவைகளை எடுத்துச் சொல்லுகிறோம் என்றால், அரசினரைக் குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காக அல்ல என் பதை அரசினர் உணர்ந்து, மேலும் மேலும் பின்னடைந்து கிடக்கிற மக்களுக்கு, சமுதாயத்தினுடைய கீழ்த்தட்டிலே இன்றைய தினம் கேவலமாக ஆக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு, புதிய தெம்பும், நல்ல வாழ்வு வளமும் அளிப்பதற்காகத்தான் நாங்கள் எடுத்துக் கூறுகிறோம் என்று உணர்ந்து அந்த நிலையில் காரியங்களை அணுகவேண்டுமென்று எடுத்துக்கூறிகொள்ளுகிறேன்.

இந்த ஹரிஜன நலத்துறை அலுவல்களை கவனிப்பதற்காக ஒரு துறை ஏற்பாடு செய்யப்பட்டு இந்த இலாகா சம்பந்தப்பட்ட அளவிலே, கல்வி, வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், விவசாயம், குடிசைத் தொழில் என்ற பல தலைப்புகளில் தங்கள் காரியங்களை ஆற்றி வருகிறார்கள். நல்ல நோக்கத்திற்காகச் செலவழிக்கப்படுகிற இந்த மானியத் தொகை யாருக்காக செலவழிக்கப்படுகின்றதோ அவர்களுடைய இருண்டு கிடக்கின்ற இல்லங்களில் கதவைத் தட்டி, "இந்தா உனக்கு இன்பம்" என்று சொல்லப்படுகிற அளவுக்குப் பயன்படுவதாக இருக்கிறதா என்று கேட்டால், எதிர் கட்சியில் இருக்கிற நாங்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியில் இருக்கிற அவர்கள் உள்ளத்தில் கை வைத்து எண்ணிப் பார்க்கிற நேரத்தில், "இல்லைதான், இது அணுகவேண்டியவர்களை அணுகவில்லை" என்பதை நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள்.

கல்வித் துறையில் நான் இங்கே சில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். கல்வியைப் பொறுத்தவரையில் மாணவர்களுக்கு உப காரச் சம்பளம் அளிக்கப்படுகிற முறை பாராட்டப்படவேண்டிய ஒன்று என்றாலும், இந்த உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிற முறையிலே சில மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்வேன். உபகாரச் சம்பளம் பெறுகிற மாணவன் புதிதாகச் சேருகின்ற நேரத்தில் உபகாரச் சம்பளம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்று நற்சான்றிதழ் பெற்றுத்தந்து, பிறகு உபகாரச் சம்பளம் தரத்தொடங்குகிறார்கள். இடையில் வகுப்பிலே தேர்வு பெறாமல் தோல்வி அடைந்து விடுவார்களானால், அவர்களுக்கு மீண்டும் உபகாரச் சம்பளத்தைப் புதுப்பித்துக்கொள்ள நற்சாட்சிப் பத்திரம் தேவைதான். ஆனால், இப்போது இருக்கின்ற முறையில் ஆண்டுதோறும் உபகாரச் சம்பளம் பெறுவதற்கு நற்சாட்சிப் பத்திரத்தைப் புதுப்பித்துக்கொள்ளும் சிக்கல் அந்த மாணவனுக்கு ஏற்படுகிறது. தேர்விலே தோல்வி அடையாமல் வெற்றி பெற்றாலும் இந்தச் சிக்கலிலிருந்து விடுபடமுடியவில்லை. ஆசிரியரிடத்திலும், தாசில்தாரிடத்திலும், போலீஸ் இன்ஸ்பெக்டரிடத்திலும், சட்ட மன்ற உறுப்பினர் அல்லது நகர சபை உறுப்பினர்கள் ஆகிய அவர்களிடத்திலும் நற்சாட்சிப் பத்திரத்தைப் பெற்று அதற்குப்பின் அந்த மாணவன் ஹரிஜன நலத்துறை அதிகாரியிடத்திலிருந்து உபகாரச் சம்பளத்தை பெறுகிற வாய்ப்பை அடைய முடிகிறது. இதற்கு இடையில் அவன் படுகின்ற இன்னல்கள் எவ்வளவு என்று அவனுக்கு ஏற்படுகிற சிரமங்கள் எவ்வளவு, விரயம் ஆகின்ற நேரம் எவ்வளவு என்று எண்ணிப் பார்த்து, இனியாவது ஆண்டுதோறும் இப்படி புதுப்பித்துக் கொள்ளும் முறையை நிறுத்தி, ஒரு முறை உபகாரச் சம்பளத்தைப் பெறுவதற்குத் தகுதி பெற்ற மாணவன் என்றால், தொடர்ந்து அதை அளிக்க வசதி செய்து தரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வியைப் பொறுத்தவரையில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த நல்லேட்டில், மிக அழகாக நம்முடைய அமைச்சர் கக்கன் அவர்கள் தந்திருக்கிற இந்தப் புத்தகத்தில், ஹரிஜனங்களுடைய முன்னேற்றம் ஏறத்தாழ 8 வகையிலே எப்படி முன்னேறியிருக்கிறது என்பதற்கான எழிலோவியம் தீட்டப்பட்டிருக்கிறது. அப்படி ஹரிஜனங்களுடைய பள்ளிக்கூடம் எப்படி இருக்கிறது என்று இந்தப் படத்தைப் பார்த்துப் புரிந்து கொள்ளுகிறவர்கள், நேர்த்தியான கட்டிடம் என்றுதான் கூறுவார்கள். ஆனால் பல இடங்களிலே இப்படிப்பட்ட ஓட்டுவில்லைக் கட்டிடம் இல்லாமல் கூறைக் கட்டிடத்தில் கற்றுத் தருகின்ற நிலையம், திண்ணைப் பள்ளிகளாக இருக்கக்கூடிய நிலையிலும் இருக்கின்றது. அது மாற்றப்படவேண்டும். கல்விக்கூடங்கள் கல்வி பயிலுகிற ஹரிஜன மாணவர்கள், பின் தங்கிய மாணவர்கள் அவர்கள் கல்வி பயிலுகிற நேரத்தில் ஆபத்து விளைவிக்காத கட்டிடங்கள், விபத்துக்களை அளிக்காத கட்டிடங்கள் தேவை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஹரிஜன நல விடுதிகளில் 93 விடுதிகளை அரசினர் ஏற்று நடத்துகிறார்கள், மற்றவைகளை தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. சென்ற ஆண்டு விவாதத்திற்கு பதில் அளித்த அமைச்சர் அவர்கள் மற்ற விடுதிகளை அரசினர் எடுத்து நடத்தாததற்குக் காரணம் அந்த விடுதிகளில் ஊழல்கள் எதுவும் இல்லாது நடைபெறுகிறது, ஆகையால் நாங்கள் ஏற்று நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எல்லா விடுதிகளும் ஊழல் இல்லாமல் ஒழுங்காக நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. சில குறிப்பிட்ட விடுதிகளை நான் இங்கே எடுத்துச்சொல்ல முடியும். விவரம் கேட்டால் அவைகளை அரசாங்கத்திற்கு விளக்க முடியும். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன், குறிஞ்சிப்பாடியிலுள்ள ஹரிஜன நல விடுதி ஊழல் நிறைந்ததாக ஆகிவிட்ட காரணத்தினால், உடனடியாக அரசினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளெல்லாம் எழுதி, கடைசியில் மந்திரிகள் கைக்கு வந்த நேரத்தில் கைவிடப்பட்டது என்ற செய்தி உள்ளபடியே சோகத் தகவல்தான் என்பதை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஹரிஜன வீட்டுப் பெண் குழந்தைகளுக்கு உடை வழங்குகிற திட்டம் இருக்கிறது. ஆனால் ஆண் பிள்ளைகளுக்கு உடை வழங்குகிற திட்டம் இல்லை என்பதை நாங்கள் மாத்திரமல்ல, ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து, இந்தத் துறையில் வீட்டு மனைகள் வழங்குகிற திட்டம். இவர்கள் வாழ்வதற்கான மனைகளை ஆர்ஜிதம் செய்வதற்காக இன்றைய தினம் திட்டமிட்டு அந்த வகையிலே எவ்வளவு மனைகளை ஆர்ஜிதம் செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை காலனிகளுக்கு என்று சொன்னால் ஒருவேளை தருகின்ற புள்ளிவிவரம் குறைவாகத் தோன்றி தேர்தல் நேரத்தில் பயன்படாமல் போய்விடும் என்று கருதினார்களோ என்னவோ, எத்தனை மனைகள் என்ற கணக்கைத் தந்திருக்கிறார்கள். 1961–62-ல், 18,769 வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றும், 19,227 மனைகள் அளிக்கப்பட்ட வீட்டு மனைகளின் மொத்த எண்ணிக்கை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எத்தனை காலனிகளுக்கு வழங்கப்பட்டது என்று தெரியவில்லை. இடையிடையே ஏற்படுகிற பொறுப்பற்ற செயலை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அரக்கோணம் தாலுகாவில் அருகில்பாடி என்ற கிராமம் இருக்கிறது. பழங்காலத்தில் அது ஒரு ஜமீன் கிராமம். அந்த கிராமம் இன்றைய தினம் அரசினர்களுக்குச் சொந்தமாக ஆக்கப்பட்டிருக்கிற கிராமம். அந்த கிராமத்தில் 12 ஏகரா நிலம் ஒரு வருட காலமாக ரெவின்யூ டிபார்டுமெண்டின்
1-00 p.m. கீழ் இருந்துவருகிறது. அந்த 12 ஏகரா நிலத்தைத் தங்களுக்கு ஆர்ஜிதம் செய்து தரவேண்டுமென்று அங்கிருக்கிற ஹரிஜன மக்கள் மனுப்போட்டு கோரிக்கை விடுத்திருந்தார்கள். ஆனால், அந்த ஊரிலுள்ள மணியக்காரர் அந்த நிலம் தனக்குத்தான் சொந்தம் என்று வாதாடி, இல்லை என்று சொல்லி தங்களுக்குத் தேவை என்று வேண்டுகோள்விடுத்த ஹரிஜன மக்கள் 50 பேரை போலீஸ்காரர்கள் பிடித்து சிறைச் சாலையிலே அடைக்கச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒன்று இரண்டு மாதங்களுக்கு முன்பு

15th March 1963] [திரு. மு. கருணாநிதி]

நடைபெற்ற சம்பவமாகும். இது எப்படி இருக்கிறது என்றால், சர்க்கார் நிலத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்ற நல்ல நோக்கம் கொண்டிருந்தாலும், இடையிலே இப்படிப்பட்டவர்கள் இருந்து அதைத் தடுக்கிறார்கள். சிதம்பரம் நடராசரை நந்தனார் வழிபட விரும்பியபோது, நந்தி மத்தியில் வழிவிட மறுத்தது என்று கதை உண்டு. பிறகு "சற்றே விலகி இரும் பிள்ளாய்" என்று கூற, நந்தி விலக கதை முடிந்தது. நான் அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன், இப்படிப்பட்ட மணியக்கார நந்திகளைப் பார்த்து "சற்றே விலகி இரும் பிள்ளாய்" என்று எச்சரிக்கை விடுவது அரசினரின் பொறுப்பாகும். இல்லாவிட்டால், நல்ல நோக்கங்களோடு தீட்டப்பட்ட திட்டங்கள் ஹரிஜனங்களுடைய வீடுகளுக்குப் போய் சேராமல், இடையிலே தடுக்கப்பட்டுவிடும் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அஃதேபோல், ஹரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி என்ற அளவிலே, 1957–58-ல் மின்சார வசதி பெற்ற ஹரிஜன காலனிகளின் தொகை 90, அதற்காக அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 1,54,818 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 1961–62–ல் 235 காலனிகளுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 1,50,000 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்ன காரணம் இந்தச் செலவு குறைந்ததற்கு என்ற விளக்கம் இதில் இல்லை. அந்த விளக்கத்தை கனம் அமைச்சர் அவர்கள் அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களுக்கு மின்சார வசதி, பொது சுகாதார வசதி, இவைகளோடு, விவசாயத்திற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது என்ற அளவில், அவர்களுக்கு மாடு, மற்ற விவசாயக் கருவிகள் இவைகளை வாங்குவதற்காக விவசாயிகளுக்கு, ஹரிஜனங்களுக்கு, ரூ. 400 கடனாக அளிக்கப்படுகிற திட்டம் இருக்கிறது. ஆனால், அந்தக் கடன் அவர்களுக்குக் காலத்திலே கிடைப்பதில்லை. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், கடன் பெற தகுதி உள்ளவர்களுக்கும் 2 ஏகரா சொந்தமாக இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. குத்தகைக்கு வைத்து பயிரிடுபவர்களுக்கு இந்த ரூ. 400 கடன் கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு கடன் கிடைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கவேண்டும். அவர்கள் கடன் பெறுவதற்கு அங்குள்ள மணியக்காரர்கள் கையெழுத்து பெறவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. மணியக்காரர்களுக்கும் அங்குள்ள மக்களுக்கும் ஏதாவது சொந்தத் தகராறு இருக்குமானால், உள்ளபடியே இந்தக் கடனைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள்கூட பெறக்கூடிய நிலைமை இல்லாமல் அற்றுப் போய்விடுகிறது. அவர்களுடைய குத்தகைச் சீட்டு, கிஸ்தி கட்டியதற்கான ரசீது இவைகளை வைத்து கடன் தொகை அளிப்பதற்கான நிலைமைகளை ஆராய்ந்து, கடன் தொகை அளிக்கவேண்டுமென்று நான் அரசினரை மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

3 கோடி 90 லட்ச ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்படும்பொழுது, பார்ப்பதற்கும், கேட்பதற்கும் பளபளப்பான திட்டங்களாக அவைகள் இருக்கின்றனவே தவிர, அவைகள் போய்ச்சேரவேண்டிய இடத்தில் போய்ச் சேரவில்லை என்பதை அரசினர் மிக மிக கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். முன்பு இந்த மன்றத்தில் வீற்றிருந்த எங்கள் கட்சித் தலைவர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் ஹரிஜன மான்ய விவாதத்தின்போது பேசுகையில், உதாரணமாகக்கூட ஒன்று குறிப்பிட்டார்கள். இவ்வளவு பணம் செலவழிக்கின்றீர்களே, அது எங்கே போய்ச் சேருகிறது என்று நாங்கள் கேட்கிற நேரத்தில், எங்கே போய்ச் சேருகிறது என்று ஆச்சரியம் உங்களுக்கே ஏற்படுகிறது. இது எப்படியிருக்கிறது என்றால், ஒரு அரசன் " நான் செலவழிக்கிற பணம் என்ன மக்களிடத்தில் போய்ச் சேருகிறதா ? " என்று கேட்க, அமைச்சர் அந்த அரசரைப் பார்த்து, அவருடைய கையிலே பனிக்கட்டியைக் கொடுத்து, " இதை 10 பேர் கையிலே கொடுங்கள் " என்று குறிப்பிடுகிறார். அரசர் 10 பேர் கையில் கொடுத்துவிட்டு, கடைசியில் அது அரசர் கைக்கு வருகிற நேரத்தில் ஒரு துளி நீர்தான் மிச்சம் இருந்தது. இப்படி 10 பேர் கையிலே கொடுத்த பனிக்கட்டிபோல இன்றையதினம் அரசினர் ஹரிஜனங்களுக்காக செலவழிக்கப்படுகிற பணம் போய்ச் சேருகிறது என்று கருதுகிறேன் என்று சொன்னார்.

[திரு. மு. கருணாநிதி] [15th March 1963

பெரிய தொகை ஹரிஜனங்கள் கைக்கு போய்ச் சேருவதில்லை. தொகை பெரும் தொகை என்று அரசினர் குறிப்பிடலாம். இது போதாத தொகை என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே குறிப்பிட்டார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

ஹரிஜனங்களுக்குக் கட்டித்தரப்படுகின்ற வீடுகள் எத்தனை நாட்களுக்கு நிற்கின்றன ? "நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" என்று சுவரைப் பார்த்து அல்லவா கேட்கவேண்டியிருக்கிறது. இதே மன்றத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. கவுந்தப்பாடியில் ஏழை ஹரிஜனங்களுக்காக கட்டப்பட்டிருந்த வீடு திறப்பு விழாவுக்கு முன்னால், ஒரு நாள் பெய்த மழையிலேயே, இருந்த இடம் தெரியாமல் குட்டிச்சுவராகி விட்ட செய்தி இந்த மன்றத்திலேயே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அது போலவே, தென் ஆற்காடு மாவட்டத்தில் கோண்டூரிலும்—கடலூருக்குப் பக்கத்து கிராமம்—கச்சரப்பாக்கத்திலும்—தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம்—கட்டப்பட்ட ஹரிஜனக் காலனிகளிலுள்ள வீடுகளெல்லாம் இடிந்து பாழடைந்து போய்விட்டன. அண்மையில் திருவண்ணாமலைத் தொகுதியில் இடைத் தேர்தல் வருகிறது. அமைச்சர் அவர்கள் அப்பொழுது அத்தகைய காட்சிகளைப் பார்ப்பதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். பல ஹரிஜனக் காலனிகளிலுள்ள வீடுகள் இடிந்து பாழடைந்து இருக்கிற நிலைமையைக் காணலாம். இந்த நிலைமையிலே ரூ. 1,000 வீடு கட்டுவதற்காக வழங்கப்படுகிற அந்தப் பணம் போதாது. அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ, 3,000 கொடுக்கவேண்டும் என்று இந்த மன்றத்தில் அடிக்கடி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சார்பிலே எடுத்துக் கூறியிருக்கிற கருத்தை நான் மேலும் மேலும் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, ஹரிஜனங்களில் மதம் மாறிய ஹரிஜனங்கள் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அவர்கள் மதம் மாறிவிட்ட காரணத்தினாலே, சமுதாயத்தில் பெறவேண்டிய சலுகைகளைப் பெற்று மிக்க சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்று எண்ணுவது தவறு. ராமன் ராபர்டாக மாறிவிடலாம். நெற்றியில் விபூதி பூசிக்கொள்வதற்குப் பதிலாக கழுத்தில் சிலுவை அணிந்திருக்கலாம். ஆனால் அவன் அதே சேரியில்தான் சாக்கடை ஓரத்தில், பன்றிகளும், நாய்களும் நடமாடுகின்ற பயங்கரமான இடத்தில் இன்றையதினம் வாழ்ந்துகொண்டிருக்கிறான். அப்படிப்பட்டவர்களுக்கு இன்று தனித் தொகுதி முறையில்கூட இடம் இல்லாமல், அவர்கள் மதம் மாறிய ஹரிஜனங்கள் என்ற பெயரால் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அவர்கள் மதம் மாறியிருக்கலாமே தவிர, அவர்களுடைய வாழ்க்கையில் வளம் ஏற்படவில்லை. அவர்கள் இன்றைக்கு அடித் தட்டிலேயேதான் கிடக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு, அவர்களை உய்விக்க தனித் தொகுதி முறையில் அவர்களுக்கு இடம் தரவேண்டுமென்பதையும் நான் இந்த மன்றத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். அவர்களுடைய வீடுகள், சேரிகள் என்ற பெயரால், காலனிகள் என்ற பெயரால், நகரங்களிலும், கிராமங்களிலும் எங்கேயோ ஒரு மூலையில் கட்டிக்கொடுப்பது என்ற நிலைமை இருக்கிறது. ஹரிஜனங்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிற காலனிகள், புதிய காலனிகள் கட்டப்படுகிற நேரத்திலாவது, ஊருக்கு நடுவில் கட்டினால் என்ன ? ஏன் மறுபடியும் மறுபடியும் மூலைக்குத் தள்ளுகிறார்கள் ? ஏன் சாக்கடை ஓரத்திற்கு தள்ளுகிறார்கள் ? சாக்கடை ஓரத்தில் குடியிருக்கச் சொல்லுகிறார்கள் ? ஊருக்கு நடுவில் இருக்கலாகாதா ? அக்கிரஹாரத்திற்குப் பக்கத்தில் சேரி இருக்கக்கூடாதா ? முதலியார் வீடுகளுக்குப் பக்கத்தில் அவர்களுக்கு வீடுகள் இருக்கக்கூடாதா ? செட்டியார் வீடுகளுக்குப் பக்கத்தில் அவர்களுக்கு வீடுகள் இருக்கக்கூடாதா ? ஏதோ தப்பித் தவறி எம். எல். ஏ. ஆகிவிட்ட காரணத்தினால், தப்பித் தவறி அரசாங்க ஊழியர்களாக ஆகிவிட்ட காரணத்தினால், தப்பித் தவறி படித்து விட்ட காரணத்தினால் அவர்கள் வேண்டுமானால் ஊருக்கு நடுவிலே குடியிருக்கிறார்கள், அவர்களால் முடிகிறது. ஆனால், வாழ்க்கையிலே கடைக் கோடியில் இருக்கிற சாதாரண இந்த நாட்டு ஹரிஜனத் தோழன் இன்றைக்குப் புறக்கணிக்கப்பட்ட நிலைமையில்தான் இருக்கிறான். அண்ணல்

15th March 1963] [திரு. மு. கருணாநிதி]

காந்தி சொன்னார், ஆலயங்களைத் திறந்துவிட்டோம் என்று பெருமை பேசுவதிலே அர்த்தமில்லை. காந்தி சொன்னார் ஆலயங்களைத் திறந்து விட்டோம். ஆனால், இந்த ஆலயங்களில் இந்த நாட்டில் இருக்கிற ஹரி ஜனங்கள் சென்று வழிபடுவதற்கு சட்டம் துணை புரிகிறதே தவிர, வழிபடு வதற்கு இன்றைய தினம் நடவடிக்கை இருக்கிறதா, நடைமுறையில் அது நடக்கிறதா, இல்லை. அது மாத்திரமல்ல. ஆலயங்களுக்குச் சென்று ஆண்டவனைத் தொழலாம் என்று ஹரிஜன மக்களுக்கு உரிமை அளிக்கப் பட்டிருக்கிறதே தவிர, ஆண்டவனுக்கு அருகாமையில் இருந்து, ஆண்டவ னுக்குப் பூஜை செய்வதற்கும், ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்வதற்கும் . . . .

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order, the hon. Member, Sri M. Karunanithi never goes to the temple. How can he know about the worship and other things?

MR. SPEAKER : It is not a point of order. The hon. Lady Member, Srimathi T. N. Anandanayaki, I think is a lawyer and she must know what is a point of order. It is not at all a point of order. Let the hon. Lady Member resume her seat.

**திரு. மு. கருணாநிதி :** கனம் தலைவர் அவர்களே, கொலை செய்தவர் கள் தான் கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்பதல்ல. கொலைக் குற்றங் களில் வாதாடுவதற்கும் கோர்ட்டுக்குப் போகலாம் என்பது அங்கத்தின ருக்குத் தெரியும். ஆண்டவன் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று ஹரிஜன மக்கள் வழிபடலாம் என்று உரிமை இருக்கிறதே தவிர, ஆலயத் தில் இருக்கும் ஆண்டவனுக்கு பூஜை செய்வதற்கோ, அபிஷேகம் செய்வதற்கோ உரிமை அளிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட உரிமை அளிக்கப் படாததற்கு என்ன காரணம்? தீண்டாமையை ஒழிப்பதற்குத் தீவிர மாகப் பிரசாரம் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதற்காக ஹரிஜன வாரம் கொண்டாடப்படுகிறது என்றும், ஹரிஜன தினம் கொண்டா டப்படுகிறது என்றும், மாவட்ட வாரியாக ரூ. 1,000 செலவழிக்க வேண்டு மென்றும் சொல்லப்படுகிறது. தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக இவ்வளவு பணம் செலவழிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் அந்தப் பிரசாரம் ஒழுங்காக நடைபெறுகிறதா? திரு. ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கை யிலே கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :

"கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளியவர்களின் பொருளாதார நிலை முன்னேற வேண்டுமானால் அவர்களுக்குப் பொதுப் பணி களில் வேலை கிடைப்பதற்கு வேண்டிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்.

கிராமங்களில் உள்ளவர்கள் 80 சத விகிதத்தினர் ரூ. 1,000-க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள 'நொடித்துப்போன தொகுதியினர்' ஆண்டுக்கு ரூ. 500-க்குக் குறைவாக வருவாய் பெறுபவர்கள் அதில் 50 சத விகிதமாக இருக்கிறார்கள். வேலை செய்து பிழைக்கத் தயாராக இருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் வேலை கிடைக்கும் என்ற உத்திரவாதத்தை அரசு அளிக்க வேண்டும். அந்தப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இவ்வாறு வெளிப்படையாகப் பிரகடனம் செய்துவிட வேண்டும்.

சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் அமைதியான முறையில் மாபெரும் சமூகப் புரட்சி ஏற்பட்டு சாதி முறை வேருடன் ஒழித்துக் கட்டப்பட்டாலன்றி, கிராமப்புற ஏழைகளின் நலன், மறுமலர்ச்சிக் கான திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது."

இவ்வாறு 1961-ம் ஆண்டிலேயே இந்தக் குழு அறிக்கை சமர்ப்பித் துள்ளது. ஹரிஜனங்களுடைய மாபெரும் தலைவர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கூட ஹரிஜனங்களுடைய வாழ்க்கைத் தரம் இன்னும் உயரவில்லை என்றுதான் கூறியிருக்கிறார்.

[திரு. மு. கருணாநிதி] [15th March 1963

தீண்டாமை ஒழிப்பு விளம்பரத்திற்காக இந்த சர்க்கார் தைரியமாகச் செய்தது என்ன? ஹரிஜன வாரத்தைக் கொண்டாடுவதைத் தவிர, ஹரிஜன தினத்தைக் கொண்டாடுவதைத் தவிர, ஹரிஜனங்கள் என்ற அழகான பெயரை வைத்திருப்பதைத் தவிர, வேறு என்ன செய்திருக்கிறார்கள்? இப்பொழுது நாம் 1963-ம் ஆண்டிலே இருக்கிறோம். 7 அல்லது 8 ஆண்டுகளுக்கு முன்பு தீண்டாமையை ஒழிப்பதற்காக இந்த சர்க்கார் ரூ. 5,000 செலவில் 30,125 சுவரொட்டிகளை அச்சிட்டது. அந்தச் சுவரொட்டியிலே போடப்பட்ட படம் என்ன? ஒரு ஏழை ஹரிஜனத் தோழனை வைதிக முறையிலே வாழ்கிற பெரியவர் ஒருவர் "தொடாதே" என்று சொல்லுகிற படம். அப்படிச் சொன்னவர் இன்றைய அரசியல் சட்டத்தின்படி, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்படி, கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்படுகிறார் என்ற முறையிலே அந்தப்படம் அமைந்திருந்தது. அந்தப் படத்தை யார் எதிர்த்தார்கள்? பார்ப்பன சமூகத் தலைவர்கள் யாராவது எதிர்த்தார்களா இல்லை. எதிர்த்தவர்கள் திருச்சியிலே உள்ள நான்கு, ஐந்து பேர். ஒரு பத்திரிகை இதைப்பற்றி குறிப்பிட்டு எழுதியது. உடனே இந்த அரசு 30,000 சுவரொட்டிகளையும் தூக்கி எறிந்துவிட்டது. ரூ. 5,000 நஷ்டத்திற்குப் பொறுப்பாக்கிக் கொண்டது. ஏன் இந்த அரசுக்கு தைரியம் வரவில்லை.? ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை மட்டும் குறிக்கும் படம் அல்ல அது. இன்றைக்கு பூணூல் போட்டவர்களும், முடி வைத்துக்கொண்டிருப்பவர்களும் பார்ப்பனர்கள் சமூகத்தில் மட்டும் இல்லாது பிற சமூகங்களிலும் இருக்கிறார்கள். அந்த உருவம் பார்ப்பனர்களை மட்டும்தானா குறிப்பிடும்? வன்னியகுல க்ஷத்திரியர்களும் ஆசாரிக் குலத்தினருங்கூட முடி வைத்துப் பூணூல் அணிகிறார்கள். அதனால் நான் மாத்திரமல்ல, தோழர் விநாயகம், மாஜி எம். எல். ஏ. கூட இதைப்பற்றிக் கேட்டார். தீண்டாமை ஒழிப்பிற்கான சுவரொட்டிகளை வெளியிட வந்த இந்த சர்க்கார் ஏன் பயந்தது? ஏன் அவர்களுக்குத் துணிவு வராமல் போய்விட்டது? நாலைந்து பேர்கள் எதிர்த்தார்கள் என்பதற்காக இந்த சுவரொட்டிகளை மூட்டை கட்டி வைத்து விட்டார்கள். அதனால் என்ன லாபம் பெற்றார்கள்? பச்சைத் தமிழர் ஆட்சி ஆயிற்றே, பாராட்டுப் பல குவித்துக் கொண்டவர்களாயிற்றே, யாரோ சொன்னார் என்பதற்காக, அந்த சுவரோட்டிகளை மூட்டை கட்டி வைக்கலாமா? பொதுவாக, அடிதளத்தில் மாற்றம் ஏற்பட்டால்தான், இன்றைக்கு கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும், கீழ் மட்டத்திலே தள்ளப்பட்டிருக்கிற ஹரிஜன குடிமகனுடைய நிலை உயர முடியும். அவனுக்கு நல்ல துணிவும், எண்ணமும் ஏற்படும். அப்படி ஒரு மாறுதல் ஏற்பட்டால்தான் அரசு செலவழிக்கிற மூன்று அல்லது ஐந்து கோடி பணத்தின் முழுப் பயனையும், பெற முடியும். அப்படி பயன் தரத்தக்க வகையில் திட்டங்களைத் திட்டும் படிக்கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தத் திட்டங்கள் ஏழை ஹரிஜன மக்களுடைய வீடுகளை அண்டாதபடி செய்து விடவேண்டாம். அவர்கள் நல்வாழ்வு பெறாத வகையில், அவர்களுக்கு அதிகாரிகள் செய்கின்ற கொடுமைகளினால் என்றென்றும் அவர்கள் ஏழை மக்களாக இருந்து கொண்டு, எந்தவிதமான முன்னேற்றமும் அடையாமல், தேர்தல் காலத்தில் எந்தக் கட்சிக்காரர்கள் வேண்டுமானாலும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கைப்பாவைகளாக வைத்திருக்கும் நிலைமை போகவேண்டும். தேர்தல் காலத்தில், சதுரங்கக் காய்களைப்போல் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இந்த நாட்டிலே உள்ள ஹரிஜன மக்கள் இருக்கிறார்கள். ஆகவே ஹரிஜனங்களுக்காக நல்ல முறையில் பாடுபடுகிறோம் என்றால், அவர்கள் நல்வாழ்வுக்காக விழைகிறோம் என்றால், திட்டங்கள் போடுவது பெரிதல்ல, ஆனால் அப்படி போடப்பட்ட திட்டங்கள் நல்ல முறையிலே நிறைவேற்றப் படுகிறதா, அதிகாரிகள் மோசடிகளைச் செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும். ஊழல்கள் மலிந்திருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அவைகளைப் போக்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்தால்தான், திட்டங்கள் வாழும். திட்டங்கள் வாழ்ந்தால்தான் இன்றைய தினம் தாழ்த்தப் பட்டவர்கள் என்று சமுதாயத்தின் ஒரு கோடியிலே கிடக்கிற ஹரிஜன மக்கள் முன்னேற முடியும். பொருளாதாரத் துறையிலே அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுவதுதான் நல்லது என்று பிரசாரம் செய்யப்பட்டப் போதிலும், ஜாதி அடிப்படையிலே தாழ்த்தப்பட்டிருக்கிற ஹரிஜன மக்களின்

நிலையை உயர்த்துவது நம்முடைய குறிக்கோளாக இருப்பதால், அப்படிப் பட்ட நல்ல குறிக்கோள் நிறைவேற்றப்படுகிற வகையிலே அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளையும் சாதி அடிப்படையில்தான் வழங்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்று கூறிக்கொண்டு, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. பொன்னையா :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். கனம் எதிர்க்கட்சி உப தலைவர் அவர்கள் பேசும்பொழுது, ஏதோ ஹரிஜன எம். எல். ஏ.க்கள் தப்பித் தவறி வந்துவிட்டதினால், அவர்களும் மற்ற பகுதிகளில் வசிக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாங்கள் தேர்தலில் நின்று, ஆயிரக்கணக்கான வோட்டுக்களைப் பெற்றுத்தான் வந்திருக்கிறோம். அப்படியிருக்கும்பொழுது, தப்பித் தவறி வந்துவிட்டோம் என்று சொல்லுவது முறையா ?

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் சொன்னதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் எழவில்லை. இவ்வளவு பெரிய சமுதாயத்திலே கொஞ்சம் பேர்தான் வந்திருக்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார். **The hon. Member is misusing the privilege of raising a point of order.**

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய பல அங்கத்தினர்கள் இந்த ஹரிஜன மான்யத்திலே பங்கு கொண்டு பேசியது மிகவும் வரவேற்கத் தக்கது. பல அங்கத்தினர்கள் கலந்து கொண்டதினால் இந்த மான்யம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இந்த மன்றமும் அறியும், மக்களும் அறிவார்கள்.

கடைசியாகப் பேசிய எதிர்க் கட்சி உப தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் நிலைமையை முற்றிலும் தெரிந்து கொள்ளாமல் இங்கே பேசியது உண்மையிலேயே வருந்தத்தக்கது. மாணவர்கள் ஸ்காலர்ஷிப்புகள் வாங்குவதற்கு வருடம்தோறும் கையெழுத்து வாங்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வாறு கட்டளையிட்டதினால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆகவே முதலிலேயே நான் இதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாகாண சர்க்கார் ஸ்காலர்ஷிப்பை பொறுத்தவரையில், அவர்கள் தேறிவிட்ட அந்த வருடத்திலேயே, அந்தப் பாடசாலையின் முதல்வர் அல்லது கல்லூரியின் முதல்வர் சம்பந்தப்பட்ட மாணவன் பரீட்சையில் தேறிவிட்டான் என்று எழுதிவிட்டால் போதும், கையெழுத்துத் தேவையில்லை என்று இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்த வரையில், அவர்கள் சொல்கிற நிபந்தனைகளின்படி நாங்கள் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுக்க வேண்டியிருப்பதினால், அதற்கு மட்டும் கையெழுத்து வாங்க வேண்டும். மாகாண சர்க்காரைப் பொறுத்தவரையில் கல்லூரி முதல்வர் அல்லது ஹெட்மாஸ்டர் எழுதி விட்டால் போதும். ஒரு தரம் ஸ்காலர்ஷிப்கொடுத்தால், தொடர்ந்து ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம் என்பதை முதலிலேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார். கடந்த ஆண்டிலே மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் தந்த காரணத்தினால், மாகாண சர்க்காரால் கொடுக்கப்பட வேண்டிய ஸ்காலர்ஷிப்கள் ஒரு லட்சத்துக்கு மேல் கொடுபடாமல் ஸாண்டர் செய்யப்பட்டது உண்மையா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குறிய கனம் மதியழகன் அவர்கள் அரிஜன மாணவர்களுக்கும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பணம் சரியாகக் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். ஏற்கெனவே இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இப்பொழுது அரிஜனங்களுக்கு மார்க்குகள் இல்லாமலேயே கொடுக்கலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. எல்லா அரிஜன மாணவர்களுக்கும் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் கொடுக்கும் பணத்தினால் மாநில அரசாங்கப் பணம் கொஞ்சம் மிச்சப்பட்டால் அதை வைத்துக் கொண்டு பின்னால் கொடுக்கப்படும். பணம் மிச்சப்பட்டால் கொடுக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. இப்பொழுது அதிகமாக செலவு செய்யப்படு